**MCOP NO. 98 /2018**

**Date 20.04.2026**

**Pw 1. மாரியம்மாள்**

**3 ம் எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் படிக்கவில்லை. விபத்து நடந்த காலம் மார்கழி, தை மாதம் என்றால் சரிதான். மேற்படி விபத்து நடந்த நேரம் மாலை 6.45 மணி என்றால் சரிதான். மேற்படி விபத்து நடந்த ரோட்டின் மத்தியப் பகுதியில் நான் நின்றேன் என்றால் செண்டர் மீடியனில் இருந்தேன். வாகனம் வரும்போது நான் தான் வாகனத்திற்கு முன்பாக விழுந்துவிட்டேன் என்றால் சரியல்ல. எனக்கு விபத்து நடந்தபோது என்னை சிவகிரியில் உள்ள அரசு மருத்துவமனைக்கு காரில் கூட்டி சென்றார்கள். மேற்படி சிவகிரியில் உள்ள மருத்துவமனையில் இருந்து என்னை தென்காசி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக போகச் சொன்னதின் பேரில் தென்காசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். கோவில் நிலத்தை கட்டுக்குத்தகைக்கு பாடுபட்டு வருவதை காட்டுவதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி இடத்தை நான் பாடுபட்டு அதன் மூலம் மாதம் ரூ. 20,000/– வருமானம் வருகிறது என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. விபத்து நடந்த பின்னர் எனக்கு நுரையீரல் அறுவை சிகிச்சை செய்யப்பட்டதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்து சிகிச்சை பெறவில்லை என்றால் சரியல்ல. நான் மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்ட பின்னர் மீண்டும் நான் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றேன் என்பதை காட்டுவதற்கான ஆவணம் எதுவும்

தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். இராஜபாளையத்தில் உள்ள CR ஆர்த்தோ மருத்துவமனையில் நான் சிகிச்சை பெற்றதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகமானது என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு ரூ.இரண்டு லட்சம் வருமான இழப்பு ஏற்பட்டதாக நான் கோரியுள்ள தொகை கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 13.11.2014 முதல் 25.08.2018 வரை வருமானத்தில் ஏற்பட்ட பகுதி இழப்பு ரூ. ஒரு லட்சம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள வட்டி விகிதம் அதிகம் என்றால் சரியல்ல. விபத்து எனது தற்கவனமின்மை காரணமாக ஏற்பட்டது என்பதால் 3ம் எதிர் மனுதாரர் இழப்பீடு தொகை செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. 3ம் எதிர் மனுதாரருக்கு எதிராக இந்த கோரிக்கை மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/–P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.